தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

துணர்	திருவள்ளுவர் யாண்டு உயயங பரிதாபி, ஆனி (1972 — ஜூன் — ஜூலை)	மலர்
சசு		ந

ம ணி வி ழ ா

கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் மணிவிழாவினை ஜூலைத்திங்களில் கொண்டாட எண்ணியிருந்தோம். ஆனல், விழாவில் பங்கேற்கவிருக்கும் அமைச்சர்கள் தமிழ்ப் பேரறிஞர்கள் முதலானோர்கள் வர இயலுங் காலத்தையொட்டியும் மற்ற ஏற்பாடுகளைத் திறம்படச் செய்யவும் எண்ணி செப்டம்பர் திங்களில் விழாவினை நடத்த முடிவு செய்துள்ளோம். விழா நடத்தப் பெறும் நாட்கள். நிகழ்ச்சி நிரல் முதலான விவரங்கள் பின்னர் வெளியிடப்பெறும்.

புத்தகக் கண்காட்சி :

மணிவிழாவின் போது புத்தகக் கண்காட்சி ஒன்றை நடத்த ஏற்பாடுகள் செய்து வருகிறோம். பல்கலைக் கழகங்களும, சில நூல் வெளியீட்டகங்களும் கண்காட்சியில் பங்கேற்றுச் சிறப்பிக்க இசைந்துள்ளார்கள். கண்காட்சி 5 அல்லது 6 நாட்கள் நடத்தப் பெறும். கண்காட்சியில் புத்தகங்களை வைத்திருப்பதற்கு வேண்டிய வசதி இலவசமாகச் செய்து தரப்பெறும், தமிழ் மொழியில் வெளி வந்துள்ள சிறந்த நூல்களைப் பொது மக்கள் பார்த்துப் பயனுற வேண்டுமென்பது குறிக்கோள். இதைக் சிறப்புறச் செய்யத் தமிழ் நாட்டிலுள்ள எல்லா நூல் வெளியீட்டகங்களும் ஆசிரியர்களும் கலந்து கொள்ள வேண்டுகிறோம்.

கட்டுரைக் கோவையும் சிறப்பு மலரும்

மணிவிழாவின் போது தமிழ்ப் பேரறிஞர்கள் பலரால் எழுதப் பெற்ற கட்டுரைக் கோவையொன்று வெளியிடப்பெறும். மற்றும் சிறப்பு மலர் ஒன்றும் வெளியிட ஏற்பாடுகள் செய்யப் பெற்றுள்ளன. சிறப்பு மலரை 5000 படிகள் அச்சிட்டு வழங்க எண்ணியுள்ளோம். நிதியகங்கள், சங்கங்கள், வணிக நிலையங்கள் கூட்டுறவுச் சங்கங்கள் முதலியவற்றின் பொறுப்பாளர்களும் வணிகப் பெருமக்களும் அருள் கூர்ந்து விளம்பரங்கள் தந்து உதவியும் தங்களாலான நன்கொடைகள் அளித்தும் ஆதரவு தர வேண்டுகிறோம்.

இத்தகு பேருதவிகள் தமிழ்ச் சங்கப் பணிகளுக்கு ஊக்கமும் ஆக்கமுமாக அமையும் எனபதை அன்போடு தெரிவித்துக் கொள்கிறோம்.

பொழிற்றொண்டர்

கரந்தைத் தமிழ்ச் சங்கத்திற்கு அளிக்கும் நன்கொடைகளுக்கு வருமான வரி சட்டப் பிரிவு 15-B யின் படி வருமான வரி விதிப்பிலிருந்து விலக்குண்டு. பொதுவாக விளம்பரங்களுக்கும் சில வரையறைகளுக்குட்பட்டு வருமானவரி விதிப்பிற்கு விலக்குள்ளது.

நன்கொடைகளும் விளம்பரக் கட்டணமும் அனுப்புவோர் பொருளாளர், கரந்தைத் தமிழ்ச் சங்கம் கருந்திட்டைக்குடி தஞ்சாவூர் - 2. என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டுகிறோம்.

விளம்பரக் கட்டணம்

	உரூபா
சிறப்பு மலர் கடைசி அட்டை இரு வண்ணங்களில் - முழுப் பக்கம்	700
உள்பக்க அட்டை	400
உள்ளே முழுப்பக்கம்.	250
,, அரைப் பக்கம்	150

இலக்கியத் திறனாய்வு

டாக்டர். சோ. ந. கந்தசாமி, எம். ஏ., எம். லிட்., பிஎச். டி.

இலக்கியம் ஒரு நாட்டுப் பண்பாட்டின் படைப்புக்களில் ஒன்றாகும். எது இலக்கியம்? என்ற வினாவைத் திறனாய்வாளர்கள் எழுப்பி ஆராய்ந்துள்ளனர். மாத்யூ ஆர்னால்டு என்பவர் இலக்கியம் என்பது வாழ்க்கையின் திறனாய்வு என்று விளக்கம் கண்டார்.[1] வாழ்க்கையில் காணப்படும் ஏற்றத் தாழ்வுகள் இன்ப துன்பங்கள் முதலியனவற்றை ஆராய்ந்து ஏற்ற முடிவை இயம்புவது இலக்கியமாகும். வாழ்வில் தோன்றும் சிக்கல்களுக்குத் தெளிவான முடிவுகளை நல்குவது இலக்கியத்தின் பணியே. அட்சன் என்ற அறிஞர் இலக்கியம் என்பது வாழ்க்கையினை உள்ளவாறு காட்டும் கண்ணாடி என்று விளக்கம் தந்தார்.[2] இக்கால எழுத்தாளர்கள் கற்பனைகளுக்கும் புனைந்துரைகளுக்கும் இடங்கொடுக்காமல் உள்ளதை உள்ளவாறே நிழற்படம்போல் எடுத்துக் கூறுவது இலக்கியம் என்பர். உள்ளது கிளத்தல் இலக்கியத்தின் ஒரு பணியே. மேலும், அட்சன் என்பவரே மொழிகருவியாக வாழ்வினை வெளிப்படுத்துவதுதான் இலக்கியம் என வரையறுத்துள்ளார்[3] சுடாபோர்டு புரூக் என்பவர் அறிவு சான்ற ஆண் பெண் இருபாலாரின் உணர்ச்சிகளும் சிந்தனைகளும் ஒழுங்காக வகுக்கப்பெற்றுப் படிப்பார்க்கு உவகை யூட்டுவதுதான் இலக்கியம் என்றார்.[4] மில்டன் என்ற மாக்கவிஞன் இலக்கியம் என்பது கலைஞனின் உயிர்த்துடிப்பாகும்; அவன் வாழ்நாளைக் கடந்து நெடுங்காலம் நிலைபெற்று வாழ்வதற்காகப் பக்குவப்படுத்தப்பட்ட அவனது உயிரனுபவமாகும் என்று விளக்கம் தருகிறார்.[5] எமர்சன் என்ற விமரிசகன் இலக்கியம் என்பது சிறந்த

---

1 Literature is a criticism of Life ...

2 Literature is a mirror of Life.

3 It is thus fundamentally an expression of life through the medium of Language.

4 By Literature we mean the written thoughts and feelings of intelligent men and women arranged in a way that will give pleasure to the reader.

5 A good book is the precious life blood of a master spirit, embalmed and treasured up on purpose to a life beyond life.

சிந்தனைகளின் பதிவேடு என்று இயம்பினர்.[6] உண்மையில் புலவன் எண்ணிய உயர்ந்த கருத்துக்களையும் கொள்கைகளையும் இலக்கியம் என்கிற பேழையில் திரட்டிப் பேணிச் சேமித்து வைக்கிறான். அட்சன் என்ற அறிஞனே மனித முக்கியத்துவம் வாய்ந்திருப்பதால்தான் இலக்கியத்தை நாம் மதிக்கிறோம் என்றான். ரசுகின் என்ற திறனாய்வாளர் காலத்தையும் வென்று வாழும் நிலைபேறான தன்மை உடையதுதான் இலக்கியம் எனப் புதியதோர் விளக்கம் தந்தார். புற்றீசல்போல் புறப்படும் நூல்களை Literature for Hour ... என்றும், நிலைபேறுடைய இலக்கியங்களை Literature for ever என்றும் வகுத்துரைத்தார். வின்செட்டர் என்ற அறிஞர் மனித உணர்வுகளுக்கு உகந்தனவாய் உள்ள இலக்கியமே நிலைபெற்று வாழும் எனக் கருதினர். மேலும், ஓர் இலக்கியம் உண்மையில் சிறப்புடையதாயின் எத்துணை முறைகள் படித்தாலும் சலிப்பு வருதல் கூடாது; மாறாகச் சுவையுணர்ச்சி பெருகவேண்டும் என்றார். இக்கருத்தினை வள்ளுவப் பெருந்தகையார் 'நவில்தொறும் நூல் நயம் போலும்' எனப் பண்டே பகர்ந்துள்ளார். நூல்கள் இறந்தாலும் எண்ணங்கள் இறப்பதில்லை என்பது ஒரு திறனாய்வுக் கொள்கை.[7] மக்களுக்குப் பயன்படும் வானநூல், அரசியல் நுல், பொருளாதார நூல். அறிவியல் நூல், வரலாற்று நூல், தத்துவ நூல் முதலியன அவ்வத்துறையில் உள்ளவர்க்கே பெரிதும் பயன்படும். ஆனல், இலக்கியமோ எல்லாத் துறையில் இருப்பவர்களுக்கும் பயனளிக்கும். வாழ்க்கையில் பல்வேறு போராட்டங்களில் சிக்கித்தடுமாறும் மக்களுக்கு ஆறுதல் அளிக்கும் இன்பச் சோலையாய், கவலை போக்கும் மருந்தாய், எண்ண எண்ண இனிக்கும் விருந்தாய் இலக்கியம் யாவருக்கும் பயன் படுதலை நடைமுறையில் காணலாம்.

இலக்கிய வகைகள் :

இலக்கியம் எங்ஙனம் தோன்றுகின்றன? எத்தனை வகையாகப் பகுத்து ஆராயலாம் என்பதையும் திறனாய்வாளர்கள் சிந்தித்துள்ளனர்.

1. தனி மனிதனின் சொந்த அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு தோன்றும் இலக்கியம்" ஒரு வகை.

---

6 Literature is a record of the best thoughts ...

7 The books die; the thoughts live ..

2. சான்று: அகப்பாடல்கள், தத்துவப் பாடல்கள், பக்திப் பாடல்கள். இரங்கல் பாக்கள், பாராட்டுப் பாடல்கள்.

3 மனிதனுக்கும் மனிதனுக்கும் இடையே நிகழும் அனுபவங்களையும் புற உலகக் காட்சிகளையும் நடமாட்டங்களையும் புனைந்துரைப்பது ஒரு வகை இலக்கியமாகும்.

சான்று: காப்பியங்கள், சுய சரிதைகள், நாட்டு வரலாறுகள், புதினங்கள், நாடகங்கள் முதலியன. பிறப்பு, இறப்பு, பழி பாவம், கடவுள் உண்மை இன்மை, மனிதனுக்கும் இறைவனுக்கும் உள்ள தொடர்பு முதலிய பல்வேறு கேள்விகளுக்கும் விடையளிக்கும் இலக்கியமும் இவ்வகையில் சேர்க்கலாம்.

4. சமுதாய வாழ்க்கையில் பல்வேறு அமைப்புக்களையும் படம் பிடித்துக் காட்டுவது, வேறு ஒருவகை இலக்கியம். இவ்வகையில் பயண நூல்கள், விளக்கக் கட்டுரைகள் முதலியன இடம் பெறும். மெகத்தனீசு, பாகியான் யுவான்சுவாங், மார்க்கோபோலோ முதலியோரின் பயண நூல்கள் குறிப்பிடத் தக்கவை. இந்நூற்றாண்டில் பல தமிழ்ப் பெருமக்கள் அயல் நாடுகளுக்குச் சென்றுவந்த அனுபவங்களை நூல் வடிவில் எழுதியிருத்தலும் கூறலாம்.

5. இயற்கையைப் புனைந்துரைக்கும் இலக்கியம் பிறிதொரு வகை.[8] இயற்கையில் காணக் கிடைக்கும் எண்ணற்ற அழகுப் பொருளாகிய ஞாயிறு, திங்கள், வானம், உடுக்கள், சோலை, கடல், மலை, குழந்தை, காளை, பசு, மான், மழை, ஓடை, அருவி முதலியவற்றைப் பற்றிய பாடல்கள் இவவகையைச் சாரும்.

சான்று: காளிதாசனின் இருதுசங்காரம், பாரதிதாசனின் அழகின் சிரிப்பு, வோட்சுவொர்த்து என்பவரின் பல பாடல்கள், கவிமணியின் மலரும் மாலையும் என்ற நூலில் பல பாக்கள்.

இங்ஙனம் இலக்கியங்களைப் பலவகையாகப் பாகுபடுத்திக் காணலாம். எனினும், எல்லாவகை இலக்கியங்களையும், இன்ப இலக்கியம், பயன் இலக்கியம் என இருவகையாக அடக்கலாம். இவற்றுள் பயன் இலக்கியம் (Applied Literature...) என்பதை முதற்கண் நோக்குவோம். குறிப்பிட்ட சமயக் கொள்கைகளையோ அரசியல் சிந்தனையையோ கட்சிக் கொள்கைகளையோ

---

8 Literature that treats the nature

பரப்புவதற்குப் பயன்படும் இலக்கியம் பயன் இலக்கியம் எனப்படும். இவ்வகையில் மணிமேகலை, சீவகசிந்தாமணி, குண்டலகேசி, நீலகேசி, பெரியபுராணம், தேம்பாவணி, சீறுப்புராணம், முதலியவற்றைக் குறிப்பிடலாம். விடுதலை உணர்ச்சியைப் பாரத மக்களிடம் பரப்பிய பாரதியாரின் தேசீயப் பாடல்களும், பாரதிதாசனாரின் திராவிட எழுச்சிப் பாடல்களும் பயனிலக்கியமே.

இங்ஙனம், கொள்கை பரப்பும் நோக்கமின்றிப் படிப்பார்க்கு இன்பம் பயக்கும் தூய இலக்கியங்களே இன்ப இலக்கியம் எனப்படும். இவ்வரிசையில் குறுந்தொகை, கலித்தொகை, சிலப்பதிகாரம், கம்பராமாயணம், பாண்டியன் பரிசு, பாஞ்சாலி சபதம் முதலிய பலவற்றைக் கூறலாம்.

இலக்கியம், கதை, புதினம், பாட்டு, காப்பியம் என்ற பல்வேறு வடிவங்களில ஒன்றினைப் பெற்றிருக்கும். இலக்கியத்தில் இருவேறு கூறுகள் திறனாய்வாளரால் சுட்டப்படுவன, 1. உருவம் அல்லது வடிவம் (Form). 2. உள்ளடக்கம் (Content) இந்த இரண்டினையும் ஆராய்தல் இலக்கியத் திறனாய்வின் நோக்கமாகும்.

திறனாய்வு விளக்கம் :

இலக்கியத்தில் ஈடுபட்டு அதன் அமைப்பினையும் ஆற்றலையும் அழகினையும் ஆராய்ந்து மதிப்பீடு செய்யும் கலைதான் இலக்கியத் திறனாய்வு எனப்படும். ஒரு நூலில் குற்றமே தேடித் திரிதலும் காரணமின்றி முறைகேடாகத் தூற்றுதலுமே திறனாய்வு எனக் கருதுதல் பெரும்பிழையாகும். திறனாய்வு செய்வோன் அனுதாப உணர்ச்சியுடன் இலக்கியத்தை அணுகுதல் வேண்டும். மேலும், அவன் சிறந்த புலமையும் திறந்த மனப்பான்மையையும், நடுநிலை உள்ளமும், கலையைத் துய்க்கும் உணர்ச்சியும் உடையவனாதல் வேண்டும். திறனாய்வாளன், விருப்பு வெறுப்பு உணர்ச்சி களுக்குச் சிறிதும் இடம் கொடுத்தல் கூடாது ஓர் இலக்கியத்தினை வாயாரப் போற்றுவதோ, வாய்வலிக்கத் தூற்றுவதோ திறனாய்வு ஆகாது. அறநெறிச் சாரம் பாடிய ஆசிரியர்,

''காய்தல் உவத்தல் அகற்றி ஒருபொருட்கண்
ஆய்தல் அறிவுடையார் கண்ணதே—காய்வதன்கண்
உற்ற குணம்தோன்றா தாகும் உவப்பதன்கண்
குற்றமும் தோன்றாக் கெடும்''

என்று திறனாய்விற்கு விளக்கம் கூறியிருக்கிறார். எனவே, விழைவு வெறுப்பற்ற உள்ளமே பழுதற்றதாய்த் திறனாய்வுப் பணிக்குத் தக்கதாகும். இவ்வுயரிய கொள்கையினைத்தான் அண்மைக் காலத்தில் வாழ்ந்த மேலைநாட்டுத் திறனாய்வாளர்கள் அட்சன், வின்செட்டர் முதலியோர் மொழிந்துள்ளனர். குறுந்தொகையில் "காமம் செப்பாது கண்டது மொழிமோ" என்று திறனாய்வின் இயல்பினைச் சுருக்க விளக்கமாக இறையனார் குறித்துள்ளார்.

இலக்கியத்தின் மதிப்புப் பற்றிய அறிவும், உணர்த்தும் திறனும்தான் இலக்கியத் திறனாய்வுக் கொள்கையினை நிலை நிறுத்தும் தூண்கள் ஆகும்.

திறனாய்வின் பணி :

1. திறனாய்வின் முதல் பணி இலக்கியத்தினைச் சுவைத்துப் பாராட்டுதல்.
2. இலக்கியத்தில் சிறந்து விளங்கும் கருத்துக்களைத் தேர்ந்து அறிதலும் மக்களிடையே பரப்புதலும்
3. இலக்கியத்தில் நிலைபேறுடைய பகுதி. நிலையாய்ப் பகுதிகளைக் கண்டுரைத்தல்
4. மூல நூல்களைக் கற்கத் தூண்டுதல்,
5. கருத்துவேற்றுமைக்கு மதிப்பளித்துப் படைப்பாற்றல், கற்பனை, பாத்திரங்களின் பண்பு நலங்கள் முதலியவற்றை மதிப்பிடல்.
6. இலக்கியத்தின் சிறப்புகள்,, உயிர்நிலை, சுவைகெழுமிய பகுதிகள் முதலியன அமைந்திருக்கும் இடத்திற்குப் படிப்பவரை அழைத்துச் செல்லும் வழிகாட்டியாகப் பயன்படுதல்.
7. புது நூல்களின் வரவுரைத்தல்
8. புது மேதைகளைக் கண்டுணர்ந்து வாசகர் வட்டத்திற்கு அறிமுகப்படுத்துதல்.
9. விளக்கம் தர வேண்டிய கருத்துக்களைத் தெள்ளத் தெளிய விளங்கச் செய்தல்.
10. தரம் பிரித்து வகைப்படுத்தித் திறன் ஆய்ந்து தெளிதல்.

பேராசிரியர் வால்டர் பேட்டர் என்பவர் இலக்கியத்துள் அடங்கியிருக்கும் உள்ளடக்கத்தை விளக்குதல், விரித்துரைத்தல், தெளிவுபடுத்தல் என்ற மூன்றுமே திறனாய்வாளனின் பணி என இயம்பியுள்ளார்.

திறனாய்வின் வகைகள் :

1. வரலாற்றுமுறைத் திறனாய்வு :—

அ) நாட்டு வரலாற்றினை அறிதல் :— குறிப்பிட்ட இலக்கியத்தினை ஆய்வதற்கு அதனைத் தோற்றுவித்த காலத்தின் வரலாற்றினை அறிதல் இன்றியமையாதது ஏனெனில், காலம்தான் கருத்துக்களை உருவாக்குகிறது. எந்த இலக்கியமும் அது தோன்றிய காலத்தைப் படம்பிடித்துக் காட்டுகிறது சங்கப் பாக்களைப் பயிலும் முன் சங்ககாலத் தமிழக வரலாற்றினை அறிதல் தக்கது கிரேக்க உரோமானியத் தொடர்பினையும் சங்கப் பாக்கள் குறிப்பதால் அவ்வயலார் வரலாற்றினையும் அறிதல் வேண்டும். சங்ககாலத் தமிழ்ச் சமுதாயம், யவனர், ஆரியர் முதலிய அயலார் கலப்பினால் சில புதுச் சிந்தனைகளுக்கு இடம் கொடுத்திருத்தல் இயல்பே இங்ஙனம் வரலாற்றுணர்வுடன் சங்கப் பாக்களைத் திறனாய்ந்து தெளியின் சில சிறப்பியல்புகளைக் காணுதல் கூடும்.

குறிப்பிட்ட காலத்தின் உணர்ச்சி குறிப்பிட்ட இலக்கியத்தின் கொள்கைகளையும் கருத்துக்களையும் முடிவுகட்டுதலுடன், அந்த இலக்கியத்தின் வடிவத்தையும் தீர்மானிக்கிறது ஆங்கில இலக்கிய வரலாற்றில் எலிசபெத் அரசி ஆண்ட காலம் நாடகம் என்ற இலக்கிய வடிவத்தையே பெரிதும் உருவாக்கியது. ஆனால் சென்ற நூற்றாண்டு நாவல் என்ற வடிவத்தையே பெரிதும் உருவாக்கிற்று. இங்ஙனமே தமிழ் இலக்கிய வரலாற்றில் சங்க காலம் உலகியல் இலக்கியத்தையும் பல்லவர் காலம் பக்தி இலக்கியத்தையும், சோழர்காலம் வரலாற்றுப் பனுவல்களையும், இக்காலம் புரட்சிக் கவிதைகள், சிறுகதைகள், உரைநடை முதலிய வடிவங்களையும் உருவாக்கியுள்ளன.

ஒரு காலச் சமுதாயம் ஏற்றுக்கொண்ட சில கொள்கைகளை அடுத்துவரும் சமுதாயம் உடன்படாத உண்மைகளையும் வரலாற்றுமுறைத் திறனாய்வால் அறிய முடியும். சங்ககால இலக்கியத்தில் பரவலாகக் காணப்படும் கட்குடித்தல், புலால் உண்ணல், பரத்தை தொடர்பு, சூதாடல், வேள்வி புரிதல்

முதலிய பழக்கங்கள் சங்கம் மருவிய கால இலக்கியத்தில் கொடுஞ் செயல்கள் எனக் குறைகூறப்படுதலைக் காண்கிறோம். திருக்குறள் சிறந்த எடுத்துக்காட்டு.

ஒரு குறிப்பிட்ட காலப்பகுதி, ஒரு குறிப்பிட்ட யாப்பு வடிவிற்கு முக்கியத்துவம் கொடுத்தலையும் வரலாற்றுமுறைத் திறனாய்வு உணர்த்துகிறது. சான்றாகக் சங்க காலத்தில் அகவல் யாப்பும், சங்கம் மருவிய காலத்தில் வெண்பா யாப்பும், பிற்காலப் பல்லவர் சோழர் காலத்தில் விருத்த யாப்பும், நாயக்கர் காலங்களில் சந்த விருத்தங்களும் இக்காலத்தில் விடுதலைப் பாடல்கள் வசன கவிதைகள் முதலிய புதுவகை யாப்பும் உருவாகியுள்ளன.

ஆ) ஆசிரியன் வரலாற்றை ஆராய்தல் ;

எந்த இலக்கியமும் தான் எழுந்த காலத்தைப் பிரதிபலிப்பதைவிட எழுதிய ஆசிரியனையே எதிரொலிக்கக் காண்கிறோம். ஆசிரியன் தன் அனுபவங்களை நூலில் நுழைத்து இருத்தல் கூடும். ஆதலின், ஆசிரியனின் வாழ்க்கை வரலாற்றினை அறிந்த பின் அவன் படைப்புக்களைத் திறனாய்வு செய்யின் சில உண்மைகளை உணர்ந்து பாராட்ட முடியும். சான்றாக சாத்தனார் கூலவாணிகன் என்று குறிக்கப் பெறுதற்கு ஒப்பவே தான் படைத்த பெருங்காப்பியமாகிய மணிமேகலையில், நிலத்திலும் கலத்திலும் நிகழ்ந்த வாணிபங்களைப் பல்வேறு இடங்களில் சுட்டிச் செல்கிறார் தமிழ்ப் பெரியார் திரு. வி. க. மகாகவி பாரதி, பாவேந்தர் பாரதிதாசன் முதலியோர் பெண்ணுரிமைக்காக வாழ்ந்ததை யாவரும் அறிவர். அவர்தம் எழுத்துக்களிலும் அதே உணர்ச்சி பளிச்சிடப் பார்க்கிறோம் தமிழ்க் கடல் மறைமலையடிகள் பல தாரங்களுடன் வாழ்ந்ததற்கு ஏற்ப அவர் நூல்களில் பலதார மணத்தை வற்புறுத்தியுள்ளார். தேவநேயப் பாவாணர் தம் வாழ்க்கையின் மூச்சும் பேச்சும் தனித்தமிழாகவே கொண்டுள்ளவர். அவர் எழுத்துக்களிலும் தூய தமிழ் துலங்கக் காண்கிறோம்.

தமிழிலக்கியத்தைப் பொறுத்தமட்டில் பண்டைய ஆசிரியர்களின் வரலாறு தெளிவாகத் தெரியவில்லை. எனினும், ஆங்கிலம் பிரெஞ்சு முதலிய இலக்கிய ஆசிரியர் பலரின் வரலாறு திட்டவட்டமாகத் தெரிகிறது. பெரும்பாலும் அவர் வாழ்வினையொட்டியே அவர் படைக்கும் இலக்கியங்களும் அமைந்துள்ளன. சான்றாக, சார்லசு வேம்ப் என்பவர் கட்டுரைகளைக் கூறலாம்.

இம்முறைத் திறனாய்விலும் சில குறைகள் உள்ளன. ஓர் ஆசிரியனைத் தனி மனிதன் என்றும், எழுத்தாளன் என்றும் இரு நிலைகளில் எண்ணிப் பார்த்தல் வேண்டும், தனிமனித நிலையில் மனிதப் பண்பாடு அற்றவர் பலர் எழுத்தாளர் என்ற நிலையில் வியக்கத்தக்க சிந்தனைகளை உருவாக்கியுள்ளனர். சேற்றிலே செந்தாமரை பிறத்தல் போன்ற இவரது இலக்கியப் பணியினை ஏற்றாகத்தான் வேண்டும்.

2. நேரடித் திறனாய்வு அல்லது இலக்கியத் திறனாய்வு ;

இலக்கியம் எழுந்த காலம் ஏது? எழுதிய ஆசிரியர் யார்? என்ற வினாக்களை விட்டுவிட்டு இலக்கியத்தில் காணப்படும் சொற்சுவை பொருட்சுவை யாவை? அதன் ஆற்றலும் அழகும் எங்கே உள்ளன? அது ஏன் இறக்க மறுக்கிறது? என்ற வினாக்களை எழுப்பி ஆராய்தல் நேரடித் திறனாய்வு அல்லது இலக்கியத் திறனாய்வு ஆகும். வள்ளுவர் காலத்தில் ஈடுபட்டு இரைச்சலிடுவார் பலர், வள்ளுவர் வாழ்க்கை வரலாற்றை ஆராய முற்பட்டு அல்லற்படுவார் பலர். இரண்டு முயற்சிகளையும் விட்டொழித்து அவர் வழங்கிய பெருநூலில் குவிந்துகிடக்கும் எண்ணக் குவியலை எடுத்தாராய்தலும் அதன் சிறப்புக்கும் உலகம் ஒப்பும் உயர்விற்கும் யாது காரணம் என எண்ணிப் பார்த்தலும் இவ்வாராய்ச்சியின்பாற் படும். இலக்கியத்தை உருவாக்கும் கற்பனை, உணர்ச்சி, வடிவம் முதலிய கூறுகளை ஆராய்தலும் இம்முறைத்திறனாய்வின் பாற்படும். ஒரு குறிப்பிட்ட இலக்கியத்தைச் சமுதாயம் ஏன் பாராட்டவேண்டும்? ஓர் ஆசிரியன் சிறந்த மேதை என்பதற்கு என்ன சான்றுகள் உள்ளன? என்ற வினாக்களையும் இத்திறனாய்வு வேண்டும்.

3. தீர்ப்பு உரைக்கும் திறனாய்வு அல்லது முடிவுநிலைத் திறனாய்வு :

இரு வேறு இலக்கியங்களை எடுத்துக்கொண்டு ஒப்பியல் ஆய்வு நிகழ்த்தி உயர்வு தாழ்வினை முடிபு கட்டுவது தீர்ப்புரைக்கும் திறனாய்வின் பணியாகும். ஆராய எடுத்துக்கொண்ட இருவகை நூல்களுக்கும் பொதுத்தன்மை இருத்தல் இன்றியமையாதது வீரசோழியம் சிறந்ததா? நன்னூல் சிறந்ததா? கம்பராமாயணம் சிறந்ததா? என்று ஒப்பிடலாம் ஆனால் நன்னூல் சிறந்ததா, பெரியபுராணம் சிறந்ததா என்று ஆராயக்கூடாது இம்முறை அயல் நாடுகளில் மிகுதியும் மேற்கொள்ளப்படுகிறது. தமிழர்கள் பெரியோரை வியத்தலும் இலமே, சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே என்ற பழங் கொள்கையினர். ஆதலின், இத்தகைய ஒப்பியலாராய்ச்சியில்

பெரிதும் ஈடுபடவில்லை. என்றாலும். வான்மிகத்தையும் கம்பன் காப்பியத்தையும் ஒப்பிட்டு உயர்வுகாணும் சிந்தனையாளரும் உள்ளனர். அப்படியே ஒரு நாவலாசிரியரையும் வேறொரு நாவலாசிரியரையும் ஒப்பிட்டு இலக்கியத் திறனாய்வினை நிகழ்த்தும் ஆற்றல் இன்னும் வளரவில்லை.

4 விதிமுறைத் திறனாய்வு :

இலக்கியம் எங்ஙனம் இருத்தல் வேண்டும் என்று இலக்கணம் வகுக்கும் நெறிமுறைகளை அளவுகோலாகக் கொண்டு தோன்றுவது விதிமுறைத் திறனாய்வு ஆகும் இம்முறையில் நிறையும் உண்டு குறையும் உண்டு இம்முறைப்படி இலக்கியங்கள் எழுதப்பட்டும் ஆராயப்பட்டும் வரின் மொழியில் ஒழுங்கும் சீரும் குலையாமல் கட்டிக் காக்க முடியும் சான்றாக, சங்கப் பாக்களின் அமைப்பினைக் கூறலாம் அன்றியும். தேவாரப் பாடல்களின் அமைப்பும் நல்ல எடுத்துக்காட்டாம். கிரேக்கப் பேரறிஞன் அரிட்டாட்டில் எழுதிய காப்பிய இலக்கணமே ஐரோப்பியக் கவிஞர்களால் பின்பற்றப்பட்டது எனினும். விதிமுறைத் திறனாய்வு புதிய அமைப்பிற்கும் புரட்சிச் சிந்தனைகளுக்கும் இடங்கொடாமல் அறிவுத் தேக்கத்திற்கு அடிகோலுதலும் உண்டு ஆங்கிலப் பெருங் கவிஞன் மில்டன் எழுதிய சுவர்க்க நீக்கம் (Paradise Lost ...) என்ற பெருங்காப்பியம் அரிட்டாட்டிலின் பழைய சட்டங்களுக்குக் கட்டுப்படாமையால் சிறந்த காப்பியம் இல்லையென்று டாக்டர் சான்சன் என்ற பேரறிஞன் முடிபுரைத்தான் ஆயினும், பின்னர் உருவாகிய காப்பிய வளர்ச்சியை முன்னிறுத்தி மில்டனின் காப்பியம் மிகச் சிறந்த படைப்பு எனப் போற்றுவோரும் பலராவர். தமிழிலும் தண்டியாசிரியன் வகுத்த காப்பிய இலக்கணத்தை மேல்வரிச் சட்டமாகக் கொண்டு தமிழ்க் காப்பியங்களை அணுகி நோக்கின் ஒவ்வொன்றும் இலக்கணத்திற்குச் சற்று விலகிப் புதுமைப் பொலிவோடு திகழ்வதைக் காணலாம்.

விதிமுறைத் திறனாய்வு வறட்டு விதிகளைப் பெரிதும் எண்ணி உண்மைக்குப் புறம்பாய்ப் பாடவும் தூண்டும் கி. பி. 18-ஆம் நூற்றாண்டின் எழுந்த தொன்னூல் விளக்கம், இலக்கண விளக்கம் முதலிய நூல்களில் தொல்காப்பியர் வரையறுத்த போர் முறைகளைக் காணலாம் ஆனால் இம்முறைகள் பன்னெடுங் காலத்திற்கு முன்பே வழக்கொழிந்தவை. எனவே, இறந்தது விலக்கல் உத்தியால் அவற்றை ஒதுக்கி. இவ்விரு இலக்கண நூல்களும் எழுந்த பிற்காலத்துப் போர் முறைகளைத்தான் இவை இயம்பியிருத்தல் வேண்டும். ஆயினும் விதிமுறைத் திறனாய்வின் செல்வாக்கு அங்ஙனம் புதுமை

படைக்க விடவில்லை. தேம்பாவணி சீருப்புராணம் முதலிய காப்பியங்களில் காப்பியத் தலைவர்கள் தோன்றிய நாட்டில் இல்லாத பழக்க வழக்கங்களையும் ஐந்திணைக் காட்சிகளையும் அமைத்திருத்தல் வறட்டு விதிகளைப் பின்பற்றும் குருட்டுக் கொள்கையால் விளைந்ததே. இம்முறை பழமை பாராட்டும் பண்பினை வளர்த்துவிடும்.

5. விஞ்ஞான முறை அல்லது செலுத்துநிலைத் திறனாய்வு:

பேராசிரியர் மௌல்டன் என்பார் விஞ்ஞான முறைத் திறனாய்வு அல்லது செலுத்து நிலைத திறனாய்விற்குரிய (Inductive Criticism ...) கொள்கைகளை உருவாக்கினார். தாவர இயல், உடலியல் கூறுகளை ஆராயப் பயன்படும் இயற்கையின் நியதிகளைப் போல (Laws of Nature...) இலக்கியத்தை ஆராயவும் சில நியதிகளைக் கண்டறிந்தார். புகழோ இகழோ கருதாமையும், ஓரம் சாராமையும், அறிவியல் துல்லியமும் (Scientific Accuracy...) இத்திறனாய்விற்குத் தேவை என்றார். முடிவு நிலைத் திறனாய்விற்கும், செலுத்துநிலைத் திறனாய்விற்கும் சில வேறுபாடுகள் உண்டென அட்சன் கருதுகிறார் இலக்கியப் படைப்புக்களின் தகுதியையும், தரத்தையும் சீர்தூக்கி நிறுத்தல் முடிவுநிலைத் திறனாய்வின் நோக்கம் எனவே, இது விஞ்ஞான முறைக்குப் புறம்பானது. ஆனால் செலுத்துநிலைத் திறனாய்வாளன் இலக்கியங்களின் தராதரங்களைப்பற்றி முட்டி மோதிக் கொள்ளமாட்டான். இலக்கியங்களை வகைப்படுத்தி, இனப்படுத்தி ஆராய்வானே தவிர இந்த இலக்கியம் இந்த இலக்கியத்தை விடச் சிறந்தது என்ற முடிவுநிலைத் திறனாய்வு புரிய முற்பட்டான். ஓர் இலக்கியத்தை ஆராய அதனுள் காணப்படும் பொருள்களைக் கொண்டே திறனாய்வு முறைகளை அமைத்துக்கொண்டு ஆய்வை நிகழ்த்துவான் சேக்சுபியர், பென்சான்சன் இருவருமே சிறந்த நாடக ஆசிரியர்கள். இவர்கள் நாடகம் எழுதக் கையாண்ட முறைகள் வெவ்வேறாகலாம. சேச்சுபியரின் நாடகபாணி, பென்சான்சனின் நாடகபாணி இரண்டுமே திறனாய்வாளனால் உயர்வென்றோ தாழ்வென்றோ கருதப்படாமல் இரண்டும் வேறுவேறு என்ற அளவில்தான் ஆராய்வான் இருவர் கையாண்ட முறைகளையும் ஒப்புநோக்க ஒரு பொதுப் புலம் (Common Background ...) இன்மையான், இருவர் முறைகளின் தரத்தின் வரிசையினை முடிவு கட்ட இயலாது. ஒரு நூலாசிரியனுக்கும் இன்னொரு நூலாசிரியனுக்கும் இடையே காணப்படும் தனித்தன்மைகளை இனம் காட்டலாம்: அத் தன்மைகளை இலக்கிய விதிகளாக்கலாம். இவ்விதிகளைத் தனித் தனியே அவ்விருவரும் படைத்த பிற நூல்களை ஆராயப் பயன்படுத்தலாம். ஆனால் இருவரின் இலக்கிய மதிப்புக்களையும் எடைபோடப் பயன்படுத்தக் கூடாது

சமுதாய அறச்சட்டங்கள் போலவும், அரசியல் சட்டங்கள் போலவும் இலக்கிய மதிப்பீட்டுச் சட்டங்கள் உள்ளன என்ற கொள்கையின்மேல் நிற்பதுதான் முடிவு நிலைத் திறனாய்வு. அறச சட்டங்களும், அரசியல் சட்டங்களும் மனிதனைக் கட்டுப் படுத்தல் போலவே, முடிபு நிலைத் திறனாய்வுச் சட்டங்கள் கலை ஞனைக் கட்டுப்படுத்துவனவாய் உள்ளன. ஆனால், தாவர இயல் விஞ்ஞானிக்கு இயற்கை நீதிகள் எங்ஙனமோ அங் ஙனமே செலுத்துநிலை திறனாய்வுக் கொள்கைகள் உள்ளன. அவை இலக்கியத்தின் புற நிலையில் உருவாக்கப்படாமல் அக நிலையில் காணப்படும் மெய்ம்மைகளைக் கொண்டு படைக்கப் பட்ட விதிமுறைகளேயாகும். சேக்சுபியரின் நாடக முறைகள் பிறரால் திணிக்கப்படும் புறச்சட்டங்களாய் இல்லாமல் அவன் நாடக அமைப்புக்களைக் கொண்டே ஆராய்ந்து உருவாக்கப் படும் அகநிலைச் சட்டங்கள் என்று அறிதல் வேண்டும். இதுவே, செலுத்துநிலைத் திறனாய்வின் அடிப்படைக்கூறும். இதனைத் தமிழ்ச் சான்று காட்டியும் விளக்கலாம். பாட்டியல் பகரும் பிள்ளைத் தமிழ் இலக்கணத்தைத் திறனாய்வுச் சட்டமாக ஏந்திக்கொண்டு பெரியாழ்வார் பாடிய கண்ணன் பிள்ளைத் தமிழையோ, குலசேகரர் பாடிய இராமன் பிள்ளைத் தமிழையோ, கூத்தர் பாடிய குலோத்துங்கன் பிள்ளைத் தமிழையோ, குமர குருபரர் அருளிய மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழையோ ஆராய் தல் கூடாது. ஆனால் அவ்வப் பிள்ளைத் தமிழில் காணப்படும் இயல்புகளைக் கொண்டே ஆராய்தல் செலுத்து நிலைத் திறனாய் வின்பாற் படும். மேலும், குமர குருபரர் பாடிய ஒரு பிள்ளைத் தமிழில் காணப்படும் இயல்புகளைக் கொண்டு அவரே பாடிய மற்றொரு பிள்ளைத் தமிழை ஆராய்தலும் இத்திறனாய்வின் பாற் படும்

முடிவுநிலைத் திறனாய்வு வரையறுத்த படிகள் (Fixed Standards) சிலவற்றை முன்னிறுத்தி மேல் தொடருகிறது. இந்த வரையறைப் படிகள் காலத்திற்கேற்பத் திறனாய்வாள னுக்கு ஏற்பப் பெரிதும் வேறுபடவே காண்கிறோம். இவ் உண்மை. திறனாய்வு மதிப்பிழக்க ஏதுவாகும் ஒரு காரணத்தை உணர்த்துகிறது. ஆனால், செலுத்து நிலைத் திறனாய்வு நியமித்த வரம்புகளை (Fixed Standards ...) உடன் படாததுடன் அவற் றின் உண்மையினையும் மறுக்கிறது. விஞ்ஞானம் ஆராயும் எல்லாப் பொருள்களையும் போலவே இலக்கியமும் கூர்தல் அறத்தின் படைப்பாகும்- (Product of evolution) அதன் வரலாறு இடையறவின்றித் தொடர்ந்து வரும் பல இலக்கிய உருமாற்றங்களின் வரலாறாகும். முடிவுநிலைத் திறனாய்வு பின் பற்றும் வரையறுத்த படிநிலைகள் காலப்போக்கிற்கு ஏற்ப

மாற்றமுடியாதனவாய் நிலைபேருய் நின்று இலக்கிய அமைப் பிற்கு ஒரு இறுதி நிலையை நிர்ணயித்து விடும். இயற்கைப் படைப்பின் எந்தப் பொருளிலும் இறுதி அல்லது முடிவுநிலை (Finality) காணப்படாமையின் இலக்கியத்திலும் அத்தன்மை யைக் காண்பது ஒவ்வாது அங்ஙனம் காணும் முயற்சி இலக் கியத் தேக்கத்திற்கு வழிவகுத்துப் புதுப்புது வகைகளில் எழும் பும் இலக்கியங்களுக்குத் தடைக்கல்லாகிவிடும்.

செலுத்துநிலைத் திறனாய்வு விரிவியல் மொழியியல் (Descriptive Linguistics) போன்றது. விரிவியல் மொழிநூல் ஒரு குறிப்பிட்ட பனுவலின் மொழியமைப்பை அந்நூலிற் காணப்படும் எழுத்து, சொல், தொடர், பொருள் அமைப்புக் களைக் கொண்டே ஆராயுமேயன்றி மொழிக்குரிய யாதானும் ஓர் இலக்கண நூலைக் கருவியாகக் கொண்டு அன்று இத் தகைய திறனாய்விலும் சில குறைகளை அட்சன் சுட்டிக்காட்டினர். திறனாய்வாளனின் தனிப்பட்ட சுவையுணர்ச்சிகளும் இலக்கியத் தின் தராதரமும் அறிய வழியில்லை. ஓர் இலக்கியத்திற்குப் பயன்படுத்திய செலுத்துநிலைத் திறனாய்வு முறைகளை வேறு இலக்கியங்களை ஆராய வழிகாட்டியாகக் கொள்ளமுடியாது மேலும், இத்திறனாய்வு கூறும் முடிவினைத் தரமான முடிபாகக் கருத இயலாது. ஒரு குறிப்பிட்ட இலக்கிய உருவத்திற்குப் பொதுவாக பின்பற்றற்குரிய விதிமுறைகள் இல்லையெனின், கட்டுப்பாடற்ற முறை நிலைத்து விடும் இப்படித்தான் பாட வேண்டும் என்ற வரம்பு உடைக்கப்பட்டுக், காட்சி கொண்டதே கோலம் என்ற நிலை இலக்கியத்தைத் தொற்றிக்கொள்ளும். இதனல் இலக்கியத் தரத்தினை எதிர்பார்க்க இயலாது.

6. பகுப்புமுறைத் திறனாய்வு ;

நூலின் ஒவ்வொரு பகுதியையும் ஆராய்ந்து நூலின் பகுதிகள் ஒன்றுடன் ஒன்று பொருந்தும் வகையையும் காண் பதே இத்திறனாய்வின் நோக்கம். இம்முறை கவிஞனின் கற் பனையினை நெருங்கிச் சென்று காணப் பெரிதும் உதவும். சான ருக, கம்பன் காவியத்தில் வரும் காண்டங்கள், படலங்கள், சிலப்பதிகாரத்தில் வரும் காதைகள் காண்டங்கள், திருக்குற ளில் வரும் அதிகாரங்கள் இவற்றிள் அமைப்பினையும் தொடர் பினையும் ஆராய்தலேயாகும் ஒரு நூற்பாவில் அல்லது பாட லில் ஒரு சொல்லின் பின் ஒரு சொல் அமைந்ததன் இயைபும் சிறப்புங் குறித்து ஆராய்வதும் இத்திறனாய்வின்பாற் படும் நம் உரையாசிரியர்கள் இப்பணியில் தலைசிறந்தவர்கள்.

7. பாராட்டுமுறைத் திறனாய்வு :

இலக்கியத்தில் காணப்படும் சிறந்த கூறுகளை அகழ்ந்து வெளிப்படுத்துவது இம்முறைத் திறனாய்வின் நோக்கமாகும்.

இதனை ஆக்கமுறைத் திறனாய்வு என்றும் கூறுவர். குற்றமே பேசித் திரியும் உலகில் நல்லியல்புகளைத் நாடிக் காண்பது அருமையே. தமிழ் உரையாசிரியர்கள் அனைவருமே இத்திற னாய்வில் துறைபோனவர்கள் நூலாசிரியரை ஒருஞான்றும் குற்றம் கூறுதற்கு இவர்கள் ஒருப்படவில்லை தொல்காப்பியர் 'எல்' என்ற சொல்லினை இடைச்சொல் எனக் கருதியதை நாகரிகமாகச் சேனாவரையர் மறுத்து அது உரிச்சொல்லே எனக் கூறியிருத்தல் அவர்தம் பெருந்தகைமையினைப் புலப் படுத்துவதாகும்

8. அழிவுமுறைத் திறனாய்வு :

இனி. இலக்கியத்தில் காணப்படும் குறைகளை மட்டும் எடுத் துப் பெருக்கிக் காட்டும் அழிவுமுறைத் திறனாய்வும் உண்டு. ஒரு நூலினை எரித்தல் வேண்டும், அழித்தல் வேண்டும் எனச் கூச்சல் போடுவது ஒன்றே இத்திறனாய்வின் நோக்கம் ஆனால், மஞ்சள் இலக்கியங்களை வேண்டுமானால் இங்ஙனம் குறை கூற லாம். சிலர் கூழும் தேவை, அறுசுவை உணவும் தேவை. என்ற வகையில் உயர்ந்த இலக்கியங்களைப் போற்றும் வாயால் மஞ்சள் இலக்கியங்களையும் மதிக்கவே செய்கின்றனர்.

இலக்கியத்தில் காணப்படும் இன்றியமையாக் கூறுகள் நான்காகும் :- 1) சிந்தனைகள் 2) கற்பனை, 3) உணர்ச்சி 4) வடிவம். இந்நான்கும் அழகுறப் பொருந்தும் இலக்கியமே காலத்தை வென்று வாழும் ஆற்றல் பெற்றது.

தொல்காப்பியரின் காணிக்கை :

இலக்கிய உறுப்புக்கள் நான்கினையும் தொல்காப்பியர் பண்டே உணர்ந்திருக்கிறார். பொருளதிகாரம் முழுமையும் இலக்கியத் திறனாய்வுக் கொள்கைகளையே உணர்த்துகின்றன. அகம், புறம், களவு. கற்பு என்ற நான்கு இயல்களும் உள் ளடக்கத்தையும் செய்யுளியல் இலக்கிய உருவத்தையும், உவமை யியல் மெய்ப்பாட்டியல் என்பன சிந்தனைகளுக்கு வலுவூட்டும் கற்பனையையும் உணர்ச்சியையும் புலப்படுத்துவன பொருளி யலும் மரபியலும் உள்ளடக்கம் உருவம் ஆகிய இரண்டிற்கும் மேலும் பயன்படும் சில மரபுகளைத் தனியாக விளக்குகின்றன. இலக்கியத் திறனாய்வுத்துறைக்குத் தொல்காப்பியனின் காணிக்கை கணிசமானது என்று கருதலாம்.

கம்பனில் நாணம்

வி. சூத்சாய்.
ஆய்வு மாணவி, தமிழ்த்துறை
கேரளப் பல்கலைக் கழகம். திருவனந்தபுரம்.

(சென்ற இதழின் தொடர்ச்சி)

நாணம் பெண்களுக்கியல்பாக அமைந்த பண்பு பற்றியே, பொதுவாக மானிட மகளிரைப் படைக்கும் கம்பர், கோசலை, சுமித்திரை முதலியோர்க்குத் தனியாக அடைகொடுத்துச் கிறப்பிக்கவில்லை. ஆயின், பழிக்கு நாணுத் தன்மையினைப் புலப்படுத்தக் கைகேயியினை மட்டும் குறிப்பிடும்பொழுது. [17] 'நாணுள் வசை பாராள்' என்றும், [18] 'பழிக்குந் நாணுய் மாணுப் பாவி' என்றும் குறிப்பிடுகின்றார். இங்ஙனம் கைகேயியின் நாணின்மையைப் புலப்படுத்த அடைகொடுத்த கம்பர், நாணினுல் உயர்ந்து கற்பினுல் சிறந்த சீதையைக் குறிப்பிடும் பொழுதும், [19] 'நாணுடை நங்கை' என்னும் அடையினைக் கொடுக்கின்றார். ஏறக்குறைய இருபத்துநான்கு பாத்திரங்களில், சீதையைத் தவிர வேறொருவருக்கும் இவ்வடையினைக் கொடுக்காதது நோக்குதற் குரித்து. காரணம், சீதை தன் நாணத்தால் உயர்ந்து [20] 'பெண்மைக் காப்பாக' விளங்குவதினுலேயாகும். இது மட்டுமன்றி, இனி சுந்தர காண்டம் சூளாமணிப் படலத்தில் சீதையே தன் நாணின் சிறப்பினைப் புலப்படுத்துகின்றாள். சீதையை இராமனிடம் கொண்டு சேர்க்க விரும்பிய அனுமனேடு செல்ல உடன் படாது மறுத்துக் கூறும்பொழுது தன் நாணத்தின் வெற்றியினைப் புலப்படுத்துகின்றாள். அஃதாவது, வெட்கங்கெட்ட அரக்கியரெல்லாம் சூர்ப்பணகையின் மூக்கு அறுபட்டது போன்று, இராம இலக்குவர் போரில் அறுபட்ட மங்கல நாணினை உடையவராயின போதல்லாமல் அவள் இயற்கையாகக் கொண்டுள்ள நாணமென்னும் குணம் பெருமையுடையதாகாது என்கிறாள்.

வெற்றி நாணுடை வில்லியர் விற்றொழில்
முற்ற நாணி லரக்கியர் மூக்கொடும்
அற்ற நாணின ராயின போதன்றிப்
பெற்ற நாணமும் பெற்றிய தாகுமோ

சுந் : சூளாமணி, 16.

இப்பாடலில், 'நாணி லரக்கியர்' என்னும் தொடர் பொதுவாக அரக்கியருக்கு நாணமில்லை என்பதைப் புலப்படுத்து

வதோடன்றி, சீதை தனது நாணைக் குறிப்பிடுவது அவள் உத்தம பத்தினி என்பதையே நிலைநாட்டுகிறது. அஃதாவது நாணத்தால் மேம்பாடடைந்த நிலையையே புலப்படுத்துகின்றது. இதிலிருந்து நாணென்னும் நலமே கற்பிற்கும் அடிப்படை என்பது புலனாகிறது. இன்னும்,

நாணல தில்லாக் கற்பின் வாணுதல்
மெல்லியற் குறுமகள்.............. புறம், 163

என்னும் அடிகளும், நாணே கற்புக்கு அடிப்படை என்பதைப் புலப்படுத்துகின்றது.

இங்ஙனம் இயல்பாகவும் சிறப்பாகவும் அமைந்த நாணிற்கு எதிராக அமைவது காதல். ஆசை வெட்கமறியாது என்பது பழமொழி. கதித்த காதல், பெண்டிர் பெருங்குணமான நிறை யென்னும் நாணுத்தாழ் வீழ்ந்த கதவை உடைத்து, அவர் உள்ளத்தரணையும் அழித்துத் தழைவதாகும். [21]காமமும் நாணமும் உயிரைக் காவடித் தண்டாகக் கொண்டு இருமுனைகளிலும் தூங்குவதாக வள்ளுவர் குறிப்பிடுவார். [22]ஒன்றில் காமத்தை விடு; அன்றேல் நாணினை விடு என்று தன் நெஞ்சிடம் இரந்து கேட்கிறாள் தலைவி ஒருத்தி. இத்தகைய கடலன்ன காமம் வந்து நெருக்கிய இந்நிலையிலும் நாண்விடாத் தன்மையே மிக்க சிறப்பு.

இராமனைக் கண்ணுற்ற நங்கை யொருத்தி அவன்பால் காதல் கொண்டவளாய் மற்றொரு நங்கையிடம், [23]"இராமனைப் பார்த்தபோது என் உள்ளத்தினையும் பார்த்தீரோ" என்று கேட்கிறாள். இங்ஙனம் நாண்விட்ட நிலையினைக் காட்டிய கம்பரே, சீதையின் நாண்விடாத் தன்மைக்குச் சிறந்ததொரு காட்சியினை நல்குகின்றார்.

கன்னிமாடத்தில் வைத்து இராமனைக் கண்ட சீதை அவன் மேல் காதல் கொள்கிறாள். அவன் [24]நிறை யென்னும் அங்குசத்தை மனமென்னும் மத்தயானை நிமிர்த்து விட்டது. இந்நிலையில் மன் இளங்குமரன் வில்லிறுத்தான் என்பதை அறிகிறாள். ஆயின், வில்லிறுத்தவன் தன்னால் காதலிக்கப் பட்டவன் அல்லனேல் உயிர்விடுவதாக மனத்தில் உறுதி செய்து கொள்கிறாள். இத்தகைய சீதைக்குச் சனகனது அவையில் இராமனைக் காணும் வாய்ப்புக் கிடைக்கப் பெறு கின்றது. இருப்பினும், அவனை நேராக நோக்குதற்கு இயல்பாக அமைந்த அவள் நாணம் இடந்தரவில்லை, [25] தன் கைவளைகளைத் திருத்துவதுபோல் கடைக்கண்ணால் பார்த்தே

ஐயம் தீர்கிருள். சீதையை 'நாணுடை நங்கை' என்று கம்பர் சிறப்பிப்பதற்கேற்ப இங்கு அவள் நாணினைக் காட்டிய விதம் எண்ணி இன்புறுதற்குரியது இங்ஙனம் சீதையை நாணின் இலட்சியமாகப் படைத்த கம்பர், நாணில்லரக்கியர் என்பதற் கேற்ப சூர்ப்பணகையையும், அயோமுகியையும் இவளுக்கு முரணுகவே அமைத்துள்ளார். இராம இலக்குவரைக் கண்டதும் காதல் மீதூர தங்கள் விருப்பனை வெளியிடுவது மிக அநாகரிகமாகவே அமைந்துள்ளது.

சீதை தன் நாணினை உயிரினும் மேலாகப் போற்றியவள். இதனைப், போரில் உணர்விழந்த இராம இலக்குவரைக் கண்ட சீதை உயிரிழந்தனர் என்றெண்ணி விமானத்திலிருந்து குதித்து உயிர்விடத் துணிந்தபோது திரிசடையிடம் கூறிய கூற்று சான்று பகரும். அதாவது. [26] கணவனைப் பிரிந்தும் உயிர் வாழ்ந்திருப்ப தால் நாண் முதலிய குணங்களையே துறந்துவிட்ட சீதைக்கு உயிரைத் துறப்பதா மேல் என்று கேட்கிருள் இன்னும், [27] நாண் துறந்து ஆவி நச்சி நாய் போன்று கடைப்பட்ட இராவணனைக் கண்ணெடுத்துப் பாரேனே என்று மாயா சனகனிடம் கூறிய வஞ்சினக் கூற்றும் தெளிவுறுத்தும். இவ்வாறு கம்பர் சீதையை நாணத்தின் பண்புகள் முற்றிலும் அமையப் பெற்ற இலட்சியப் பெண்ணுகவே காண்கிருர் எனலாம். எனவே தான், சீதை தோன்றுதலால் நாணமும் தவம் செய்து சிறந்தது என்று அனுமன் வாயிலாக வெளியிடுகின்ருர்.

பேணநோற்றது மனைப் பிறவி பெண்மைபோல்
நாணநோற் றுயர்ந்தது நங்கை தோன்றலான்,

சுந்: காட்சி 73.

[28] உண்மையான நாணம் குற்றத்தினின்றும் நீக்கும் என்று அடிசன் குறிப்பிடுவது போன்று கம்பனது பெறலருங் காப்பி யத்தில் நாணின்றி இழிநிலை யடைந்தோரையும், நாணினல் உயர்ந்து மேம்பட்டோரையும் காணலாம். நாணில்லரக்கியர் மங்கல நாணினை இழக்கின்றனர். நாணிலி சூர்ப்பணகை மூக் கிழந்து இழிநிலையடைகிருள். அயோமுகி இறப்பதற்கும் நாண் இன்மையே காரணம். இவர்களைப் போலன்றி, சீதை உயிரைவிட நாணிற்கு முதலிடம் கொடுத்தவள். எனவே சீதையின் தோற்றத்தால் நாண் என்னும் பண்பிற்கும் ஒப்புயர்வற்ற சிறப்பு உண்டாயிற்று எனவே தான் பல்வேறு துன்பங்கட் கிடையே சுடச்சுட ஒளிரும் பொன்போல் ஒளிர்ந்து [29] 'பெண்

ணிற்கு அருங்கலம்' என்றும், [30] பெண்மைக் கரசி' என்றும் புகழப்படும் அளவிற்குத் தன்னிகரற்று விளங்குகிறுள் ஆயின் கைகேயியோ, வரம் தராவிடில் உயிர் துறப்பதாகக் கூறி பழிக்கு நாணுது தன் கணவன் உயிருண்டு நாணினைத் துறந்து தன் உயிரை மேலாகப் போற்றியவள். எனவே கங்குலாகிய நங்கையும் அவள் நாணின்மையைக் கண்டு நாணமடைகின்ருள். [31] பழி சூடி பழிவளர்க்கும் செவிலித் தாயாகவும் நடைப்பிணமாகவும் காட்சியளிக்கின்ருள். இவ்வாறு பல்வேறு உள்ளங்களால் நாணின் இன்றியமையாமையினை மிக நுட்பமாகப் புலப்படுத்தி விடுகின்ருர் கம்பர், இதிலிருந்து ஒருவரின் புகழிற்கும், பழிப்பிற்கும், வாழ்விற்கும், தாழ்விற்கும் அடிப்படை நாணே என்பது புலனுகிறது. [32] ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும் என்று வள்ளுவர் சிறப்பித்த ஒழுக்கத்திற்கும் அடிப்படை நாணே என்பது வெள்ளிடைமலை. எனவே தான் தொல்காப்பியரும். [33] 'உயிரினும் சிறந்தன்று நாணே' என்று அறுதியிட்டுரைத்தார்.

அடிக்குறிப்பு :

17. அயோத்தியா காண்டம் : கைகேயி சூழ்வினைப் படலம். 34
18. அயோத்தியா காண்டம் : கைகேயி சூழ்வினைப் படலம், 49
19. பாலகாண்டம் : கார்முகப் படலம், 28.
20. யுத்த காண்டம் : மீட்சிப் படலம், 60.
21. குறள், 1163.
22. குறள், 1247.
23. பாலகாண்டம் : உலாவியற் படலம். 38.
24. பாலகாண்டம் : மிதிலைக் காட்சிப் படலம். 40
25. பாலகாண்டம் : கோலங்காண் படலம், 37
26. யுத்த காண்டம் ; சீதை களங்காண் படலம், 31
27. யுத்த காண்டம் : மாயா சனகப் படலம். 67
28. True Modesty avoids everything that is criminal
29. கிட்கிந்தா காண்டம் : கார்காலப்படலம், 20
30. பாலகாண்டம் : கோலங்காண் படலம், 2.
31. அயோத்தியா காண்டம் : குகப்படலம் 70
32. குறள், 131
33. தொல்காப்பியம், பொருளதிகாரம், 111.

வேற்றுமை உரைகளின் வேற்றுமை.

(நக்கீரன் வழியடிமை. வித்துவான்,
பி. மா. சோமசுந்தர முதலியார்.

க. முன்னுரை

சொல்லேருழவராம் நல்லாசிரியன்மார், உள்ளமென்னும் உயர் நிலத்து நூலியல் நெறியாம் எருப்பெய்து, அறிவுநீர் பாய்ச்சி, வெஞ் சொற்களைக் கட்டு, செஞ்சொற் பைங்கூழ்கண்டு, நாடும் நற்றமிழும் நலமுறுவான் வேண்டி. இலக்கிய மென்னும் இன்சுவையடிசில் படைப்பர். இவர்தம் நூலிய னெறியே பிற்றை ஞான்று இலக்கண நெறி யென்று இலங்குவ தாயிற்று. என்னை? இலக்கியத்தினின்று எடுபடுவது இலக் கணமாகலான் என்க. இலக்கியங் கண்டதற் கிலக்கணம் இயம் பலின்' என்று பல்கலைக்குரிசில் பவணந்தியார் பகர்ந்ததுமோர்க. இதனானே இலக்கண நூலாசிரியன்மாரை நெறிப்படுத்தும் பெருந்திருவினர் இலக்கிய முரைக்கும் இன்றமிழ்ப் புலவன்மாரே என்பதும் பெறப்படல் காண்க.

அற்றேல்ஃ தங்ஙனமாக, உரையாசிரியன்மார் தம்முள் ஏற்றந் தங்கியார் இலக்கிய உரையாசிரியன்மாரோ இலக்கண உரையாசிரியன்மாரோ வெனின் இலக்கண உரையாசி ரியன்மாரே என்க என்னை? இலக்கிய உரையாசிரியன்மார்க்குத் தாம் உரைகாண்பான்புக்க நூலறிவும், அதன் முதல், வழி, சார்பு நூலறிவுமே பெரிதும் வேண்டப்படும்; ஆயின், இலக்கண உரையாசிரியன்மார்க்கோ தமிழ் நூற்பரவை முற்றுங் கடந்தொளிர் மூதறிவே வேண்டப்படுமாகலின். இஃது ஒல்லுவதொன்றன்று ஒல்லுவதெனச் சாதிப்பினும் முக்குண வயப்பட்டும், மறவி முதலியவற்றுன் விழுங்கப்பட்டும் இலக்கண உரையாசிரியன்மார் ஓரோ வழிமுறை மறந்துரைத்தலுங் கூடும். அதுகருதி அவர் இகழப்படார் என்க. நூல் கற்கப் புகுவோர் நீரொழியப் பாலுண்குருகின் நீர்மையராய் ஒழுகலே கடப் பாடாம் என்றுணர்க.

உ. தண்டி யலங்காரம்

மேற்போந்த கருத்தை ஒரு சான்று கொடு நிறுவுவாம். தண்டி யலங்காரத்துள்,

"சொல்வழு வென்பது சொல்லிலக் கணத்தொடு
புல்லா தாகிய புகர்படு மொழியே"

எனவரூஉம் நூற்பாவுக்கு உரைவரைந்தார், தாமே ஒரு செய்யுளை வரைந்து, அதன்கண் வந்த 'நுனக்கு' என்னும் சொல்லை 'வழூஉச்சொற் புணர்க்கப்பட்டது' என்றுரைத்தார். இவ்வுரை ஏலாது. என்னை ?

"நூலடைந்த கொள்கையாலே நுன்னடி கூடுதற்கு" எனக் காழி வேந்தரும், 'விள்ளத்தா னென்று மாட்டேன் விருப்பெனும் வேட்கையாலே, கள்ளத்தேன்போல நின்னை வாய்மடுத்துண்டி டாமே" என நாவேந்தரும், "மொய்த்தசீர் முந்நூற்றறுபது வேலி மூன்று நூறு வேதியரோடு நுனக்கு !' என நாவலூராளியும் "சலந்தரன் முதலா நுன்குலத் தலைவர்" எனத் தணிகைப் புராணமுடையாரும் இச்சொல்லை ஆண்டமையானும் வேறுபல நூற்கண்ணும் இச்சொல்லாட்சி யுண்மையானுமென்க. இது குறித்து இறையருட் கடலில் இனிது திளைத்த பாம்பனடிகளாரும்,

"பன்மைக்கு நும்மெனுஞ்சொல் வரூஉ மென்றுணர்த்திய தொல்காப்பியனுர் முதலிய இலக்கண நூலுடையாருப் ஒருமைக்கு நுன்னென்பது வரூஉபென்றுணர்த் தாமைக்குக் காரணம் யாதாமெனின், இது போன்ற அடிப்பட்ட சான்ருேர் வாக்கியமவர்க்குக் கிடையாமையே யஃதாமென்க" என்றருளிச் செய்தமையுமறிக.

௩. நூற்பாவும் உரையும்

அ) "அதுவென் வேற்றுமை யுயர்திணைத் தொகைவயி
னதுவென் னுருபுகெடக் குகரம் வருமே"

எனுந் தொல்காப்பியச் சொல்லதிகாரத்து 94-ஆம் நூற்பாவுரைக்கண், சேனுவரையர்,

"உயர்திணைத் தொகைவயின் அதுவென் உருபுகெடக் குகரம் வருமென்றதனுன் ஆறனுருபு அஃறிணைப்பால் தோன்றநிற்றல் பெற்ரும். உயர்திணைத் தொகையின் ஆருவதனை விலக்கிநான் காவதேசேறலின் "இதனதிதுவிற்று" என்னுஞ் சூத்திரத்தாற் கூறப்படும் பொருளோடுடன் வையாது இதனை வேறுகூறினர்" என விரித்தார்.

ஆ) சங்கர நமச்சிவாயப் புலவரும் நன்னூல் 300-ஆம் நூற்பாவுரைக்கண்

"அஃறிணை யொருமை பன்மைகட்கியைந்த வுருபு இங்ஙனங் கூறவே, உயர்திணை யொருமை பன்மையாகிய கிழமைப் பொருட்

கிவ்வுருபுகள் ஏலாவென்பது பெற்றும். அவை வருங்கால் அவனுடைய விறலி, அவனுடைபு விறலியர் என மூன்று சொல் லாயிரண்டு சந்தியாய் முன்னது எழுவாய்ச் சந்தியும், பின் னது பெயரெச்சக் குறிப்புச் சந்தியுமாமென்க அவன் விறலி என்புழி உடைய என்பது இசையெச்சம். சாத்தனுடைய வியல்பு, சாத்தனுடைய கை என்றற்றொடக்கத்தனவுமன்ன. இவற்றை ஆறும் வேற்றுமைச் சந்தி என்றும், உடைய என்பதனைச் சொல் லுருபு என்றுங் கூறுவாருமுளர். ஆசிரியர் தொல்காப்பியனுரும் உயர்திணை யொருமை பன்மைகட்கிவ் வுருபுகளேலா எனபது கருதி'' அது வென்வேற்......வருமே என்றூர்'' எனச் சேனு வரையரைப் பின் பற்றியே உரை வகுத்தார்.

இ) சங்கர நமச்சிவாயருரையை நன்கு திருத்தியும் புதுக்கி யும் அமைத்த திறப்பாட்டினரான மாதவச் சிவஞான யோகி களும் மேற்போந்த கருத்தை மறுத்துரையாமையின் உடன் பட்டாராயிற்று.

ஈ) திருவல்லிக்கேணி வை மு. சடகோபராமாநுசாசாரி யாரும், சே. கிருட்டினமாசாரியாரும் வெளியிட்ட நன்னூற் பதிப்பில்,

> ''சிறுபான்மை 'அது' உருபு - நினது·அடியா', 'எனதுகைகள்' என வருமொழி பன்மையா யிருக்கும் பொழுதும் வரும். பிற உருபுகளும் மாறி வருதலுண்டு''

என விலக்குண்மை விதந்த தோடமையாது. அவர் களிற்றிய பிறநூல்களில் இவ்விலக்கைப் பெரும்பான்மையாய்க் கையாண்டுமுளர். அம்மட்டோ! உயர்திணை யொருமை பன்மைகட்கு 'அது' என்னும் உருபு வராதென்றும் வழுத்திரைலர்.

2. இயற்றமிழாசிரியர் திருத்தணிகை விசாகப் பெருமாளை யரவர்கள், தம் நன்னூற் காண்டிகை யுரையில்

> ''அஃறிணை ஒருமை பன்மைகட்கு இவவுருபுகள் வருமெனவே, உயர்திணைப் பெயர்களுக்கு இவ்வுருபுகள் வரா என்பது பெற்றும், உயர்திணைப் பெயர் வரும்போது சாத் தனுக்கு மகன் எனக் குவ்வுருபு வருமென்றறிக''

எனச் சேனுரையரையும் நன்னூல் விருத்தி யுரையாசி ரியரையுந் தழுவியே உரைத்தாராயினும், அவ்வுரையின் பொருத்த மின்மை நோக்கியே,

"சிறுபான்மை அரனது தோழன் என உயர்திணை யொருமைப் பொருண்மைக்கும், நினதடியாரொடல்லால், எனது கைகள் என இருதிணைப் பன்மைப் பொருண்மைக்கும் அது உருபும் வரும்"

என விரித்ததும் உன்னற்பாலது. ஈண்டுச் சிறுபான்மை என்றாரேனும் பெரும்பான்மையும் என்பதே அவர் கருத்தாம் என்னை ? இலக்கியம் அவ்வாறுண்மையாலென்க அவ்வுண்மை பின்னர்க்காட்டும் தம் முன்னோர் உரைக்கு இழுக்குண்டாகாமை கருதியே சிறுபான்மை யென்றாரென்பதுதேர்க.

ச. இலக்கியச் சான்றுகள்.

அ) திருவருட் செல்வமும் தீந்தமிழ்ப் புலமையும் ஒருங்கே எய்திய ஒள்ளிய ரருண்மொழிகளுட் சில வருமாறு :

1) "கொள்ளேன் புரந்தரன் மாலயன் வாழ்வு குடிகெடினும்
நள்ளேன் நினதடியாரொடல்லால் (திருவாசகம்)

2) "ஏத்துவர் மாமலர் தூவித் தொழுதுநின்
ரூர்த்தெம தீசன் அருட்சேவடி" (திருமந்திரம்)

3) "கொற்றத் திறலெந்தை தந்தை தன்தந்தை யெங்கூட்ட
மெல்லாம்
தெற்றச் சடையாய் நினதடியேம்.
(திருத்தொண்டர் திருவந்தாதி)

4, "விடைமேல் வருவிருமதன்பிலர்போல் யானேவுறுவன்
(பெரிய புராணம் - தடுத்தாட்கொண்ட புராணம்
177-ஆம் பாடல்)

5. "அஷக ளேயுன தடியார்சீர்"
(சேக்கிழார் புராணம் - 30 ஆம் பாடல்)

6. "ஆரணன் தனது மைந்தர்க் கரும்பெறல் ஞானபோதம்"
(கந்தபுராணம் உற்பத்திக் காண்டம் மேருப்படலம்
18 ஆம் பாடல்)

7. "குமரி காளிப யங்கரி சங்கரி
கவுரி நீலிப ரம்பரை யம்பிகை
குடிலை யோகினி சண்டினி குண்டலி—யெமதாயி"
('கமலமாதுடன்' எனுந் திருப்புகழ்)

8. "சிவயநம நமசிவய காரணன்சுரந்
தமுதமதை யருளிகயமை யாளுமெந்தைதன்
திருவுருவின் மகிமெனது தாய்பயந்திடும்—புதல்வோனே
("ஒருவரையு மொருவ" ரெனுந் திருப்புகழ்)

9, "ஏறுமயில் வாகனகு காசரவ ணுவெனது
வீசவென"
("ஆறுமுகம் ஆறுமுகம்" எனுந் திருப்புகழ்)

10. "உனதுத்ர யுலக சராசர மெவையும்"
(திருப்போரூர்ச் சந்நிதிமுறை)

11. "விடையதூ ரிறையே தாதைமற் றவன்பான்
மின்னெம தன்னை"
(வைராக்கிய தீபம்)

12, "வாவென்பாரின்றி யுனதன்பர்"
(திருவருட்பா - சீவசாட்சி மாலை பாடல் 24)

13. "என்தந்தையே யெனது தாயே"
(திருவருட்பா - தெய்வமணி மாலை பாடல் 4)

14, "அண்ணலேயும தன்பருக்கு"
(திருவருட்பா - மருட்கை விண்ணப்பம் பாடல் 1)

ஆ) அளப்பரும் புலமையும் புகலரும் புகழும் கொண்டு பொலிந்த தண்டமிழ் நல்லாசிரியன்மாருரைகளுட் சிலவருமாறு:

"குட்டுதற்கோ பிள்ளைப் பாண்டிய ஞரில்லை" எனக் குவலய மிசை கொற்றஞ்சார் தமிழ்ப் புலமையுங் கோடாத ஆட்சித் திருவு மெய்திய அதிவீரராம பாண்டியஞரியற்றிய காசி காண்டத்துள் வருவன தம்முள் இரண்டு தரப்பட்டுள்ளன. அவையற்றைக் காண்மின்;

15, 'அறந்தவாத்நம தன்பர்"
(கற்பிலக்கணங் கூறியது - பாடல் 15)

16. "அருள்கூர் முத்தி மண்டபத்தி னமைத்த வுலகைநம
தன்பர்"
(முத்தி மண்டபத்தின் கதையுரைத்தது - பாடல் 13)

"குறும்பியள வாக்காதை குழித்துத் தோண்டி எட்டிநா" அறுத்த வில்லிபுத்தூராழ்வார் தம் உரைகள் சில கீழே தரப் பட்டுள.

17. ''அரசரு மெனதுமைந்த ரைவரும் யானு மீண்டும்''
(வில்லிபாரதம் - சூது போர்ச் சுருக்கம் பாடல் 278)

18. ''பரமசிவனது மைந்தனும்''
(கந்தரந்தாதி வில்லிஉரை காப்புச் செய்யுள் 1)

19. ''பார்வதியினது புதல்வனே''
(கந்தரந்தாதி வில்லிஉரை - காப்புச் செய்யுள் 2)

20. ''விஷ்ணுவினது சிறந்த மருமகனும்''
(கந்தரந்தாதி வில்லியுரை - நூல் செய்யுள் 2)

21. ''வண்ணையணம் புரிந்துனது கணவனுவி'' (கந்த புராணச் சுருக்கம் - உற்பத்தி காண்டம் செய்யுள் 23)

22. ''ஓங்குமேழ் கடலும் வந்த வொருகணத் தெனதுகேள்வன்''
(திருவால வாயுடையார் திருவிளையாடல் புராணம் - மலையத்துவசனை யழைத்த திருவிளையாடல் செய்யுள் 2)

23. ''அறமலி தனது புதல்வ னுக்கிரன்'' (திருவால வாயுடையார் திருவிளையாடல் புராணம் வளைவேல் செண்டு கொடுத்த திருவிளையாடல் செய்யுள் 2)

24, ' மன்னனுந் தனது செல்வ மகட்குள மூகை நீங்க''
(திருவாதவூரடிகள் புராணம் - பத்தரை வாதில்வென்ற சருக்கம் பாடல் 17)

இ) உரையாசிரியன்மார் உரைகள் சிலவற்றிலுறும் 'அது' என்றும் உருபுப் பறாற்சியைக் காண்பாம்,

25. ''அவன் தனது பைந்தொடி புடைய மேனி''
(சிலப்பதிகாரம் - அடியார்க்கு நல்லார்உரை - கனுத் திறமுரைத்த காதை 66 - 71 வரிகள்)

26. ''அழகுபெறப் புனைந்து செய்த தொழிலையுடைய தவிசிலே
தனது செல்வன் வந்திருந்த பின்பு'' (சிலப்பதிகாரம் - அடியார்க்கு நல்லார்உரை - கொலைக்களக்காதை 35 - 43 வரிகன்)

27. ''பிறனது மனையாளைப் பாராத'' (திருக்குறன்' மணக்குடவர் உரை - பிறனில் விழையாமை குறள் 8)

ஈ) 19, 20 நூற்றாண்டில் புலமைச் செல்வங்கொண்டு பெரும்புகழ் ஈட்டிய நல்லாசிரியன்மார் உரைகளில் சில காண்போம்.

28. "தருணமிது வெனவமரர் பணிநல்லை யமர்கந்தர் தமதடியார் நிதமும் வாழி" (யாழ்ப்பாணம் ஆறுமுக நாவலர் அருளிய "அருண விகசித" என்னும் பாடல்)

29. "ஒருவன் நான்முகமுள்ளவனைத் தனதுமகனைப் பெற்றான்' (தி. பானுகவியவர்கள் ஹரிஹரதாரதம்மியம்)

30. "ஆதி இலக்குமியும் தனது கணவனார் கருத்தின்படி" (ஞாலமெல்லாம் நற்றமிழுஞ் சைவமும் பரப்பிய திருப்பாதிபுலியூர் ஞானியாரடிகள் வரைந்த 'காமாட்சி திருமணம் எனுங்கட்டுரை)

31. "முறையானே தமது சந்தான குரவர் பரமெனக்கண்டுபாசிக்கும் நடராச மூர்த்தியையும், தமது குருமுதல்வரையும்" (திராவிடப்பிரகாசிகை)

32. "நினது மெய்யன்பர்கள்" (தாயுமானவர் பாடல் யாழ்ப்பாணம் கதிரைவேற் பிள்ளையவர்கள் உரை)

33. "எமது ஆசிரியப் பெருந்தகை." "எமது ஆசிரியர்," "எமது ஐயர்" (கதிரைவேற் பிள்ளையவர்கள் வரலாறு - தமிழ்ப் பெரியார் திரு. வி. க. வரைந்தது)

34. "அச்சுத களப்பாளரது மனைவியார்," "தமது மாணவர்க்கு" (மெயகண்ட சாத்திர முன்னுரை - திரு. கா. சுப்பிரமணியப் பிள்ளை M.A., M.L., வரைந்தது)

35. "தமது அருமை மனைவியாருடன்," தமது ஞானசிரியரான" "அவரது தந்தையார்" "தமது அருமை மகனாரின் விழைவு" ("மெய்கண்ட தேவர் வரலாற்றாராய்ச்சி" சிவஞான சுவாமிகள் வரலாறு - திரு. ஔவை. சு. துரைசாமிப் பிள்ளையவர்கள் வரைந்தவை)

36. 'தசரத சக்ரவர்த்தியினது புத்திரர்கள்,'' 'இராவணனது தங்கை" (கம்பராமாயணம் - ஆரணியகாண்டம் மு. ரா. கந்தசாமிக் கவிராயர்கள் உரை)

37. "உண்ணே னெனினு முனதடியார் தமக்கு"
(கயற்கண்ணி மாலை டாக்டர் உ. வே சாமிநாத ஐயர்)

38. "எனது ஆசிரியர்' "சிவபிரானது இளைய குமாரனை" (கம்ப ராமாயணம் - சுந்தரகாண்டம் வை. மு. கோபாலகிருஷ்ண மாசாரியார் அவர்கள் உரை)

39. "தமது அடியாரை" (மதுரையந்தாதி பாடல் 29 மதுரையம்பதி மகாவித்வான் சபாபதி முதலியாரவர்கள் உரை)

எனவருவன காண்க. இன்னணம் வருவ பல்ல. அவை யெல்லாங் காட்டப்புகின் ஏடுங்காலமும் போதா என்றுணர்க.

ரு. உரை நலங் காண்டல்

இத்துணைச் சான்றுகளுளவாயும், அவைதம்மை நோக்காது 'அது' உருபு உயர்திணைக் கண்ணுருதென்னும் உரையாசிரியன்மார் (சேனாவரையரும், சங்கர நமசிவாயரும்) கூற்று ஒவ்வாதென்க. இவை பிற்றைநாட் புலவன்மார் கூற்றுகளின் சேனாவரைய்ருணர்ந்திலரெனல் சாலாது; சாலாமையின், அவருரை தக்கதென்னுமோ என்னின் என்னும் என்னை? அவர் இத்துணைச் சான்றுகளையுங் காண்டலொல்லாதாயினும், 1, 2, 3. 4. 5, 6. 22. 93, 25, 26, 27 என்னும் எண்களிற் போந்த சான்றுகளில் சிலவற்றையும், ஈண்டுக்காட்டாதொழிந்த பழந்தமிழ் நூல்களிற் பயில்வனவற்றையுங் கண்டிருத்தல் வேண்டுமாகலின் ஏனையவிடங்களில் நூற்பாவுளடங்காதனவற்றைத் தம்விரிவுரையுள் அடக்கிக் காட்டும் இயல்புடைய உரையாசிரியன்மார் இது குறித்து மூகஞ்சாதித்தன ரெனல் சால்பிற்றன்றே

சங்கரநமசிவாயப் புலவரோ ஒன்று முதலிருபத்து ஏழு வரையுள்ள சான்றுகளை யுணர்ந்தாராகல் வேண்டும். உணர்ந்திலரெனின் அவரது புலமை அத்துணைப் பரந்ததன்றெனும் பழியுண்டாகும். தொல்காப்பியர் கருத்தையோராது சேனாவரையர் உரை செய்ய, அவ்வுரை யொன்றையே பிடித்து "இலக்கியங் கண்டதற்கிலக்கணம்,' என்ற இலக்கணத்தைப் புறம் போக்கி வரையப்பட்ட சங்கரநமச்சிவாயருரை தள்ளற்பாலதே யென்க.

அஃதற்றாக, இற்றைநாட் புலவன்மார் இலக்கணம் விளக்குவான்புக்கும், மொழிநூல் வரைவான்புக்கும் கதானுகத நெறிபற்றி

இலக்கிய நெறியிகந்து, யாம்காட்டிய காண்டிகை யுரைகளைக் கடைக்கணியாமை யாதுபற்றியோ? சான்றுக, தொல்காப்பிய ஆராய்ச்சி'' என்னும் நூலின் ஆசிரியர் (அந்நூல் பக்கம் 98இல்)

''தழுவும் பெயர் உயர்திணையா யிருப்பின் 'அது' முதலிய உருபுகள் வாரா என்றும், 'உடைய' எனும் சொல்உருபு வரும் என்றும் நன்னூல் உரையாசிரியர்கள் கூறியுள்ளனர்''

என்றெழுதி. சங்கரநமச்சியாயருரையை எடா அக்காட்டி. :'தொல்காப்பியர்க்கும் அதுவே கருத்தென்பது'' ''அதுவென் வேற்.........வருமே'' என்பதனுல் அறியலாகும் 'நம்பியது மகன்' என்று விரித்தலாகாது. 'நம்பிக்கு மகன்' என்றே விரித்தல் வேண்டும். சேனுவரையர்க்கும் இக்கருத்து உண்டென்பது ,,உயர்திணைத் தொகைவயின்........... வேறு கூறினர்'' என்று கூறுவதால் அறியலாகும்''

என்று மொழிந்திருத்தலை ஓர்க.

இனி ,,மொழிநூல்'' என்ற நூலின் ஆசிரியர் (நூல் பக்கம் 156 - 157இல்) ''அது'' என்னும் உருபு ஒன்றன்பால் குறிப்பு வினைமுற்றுக்களிலும் குறிப்பு வினையாலணையும் பெயர்களிலும் ஈறுதல் காணின் அதன் உண்மை ஒருவாறு விளங்கும். 'து' என்பது ஒன்றன்பால் விகுதியே. அதனுலன்றே 'அது' என்னும் உருபு ஆறும் வேற்றுமையில் அஃறிணை யொருமைப் பெயர் களின் கிழமையைக் குறிக்கவே வரும் என இலக்கண நூலாரும் வரையறுக்கப் புகுந்தனர். ,'எனது கைகள்''. ''எனது மகன்'' என வருதல் இலக்கண வழக்கன்று பேச்சு வழக்கும் அன்று. அஃறிணைப் பெயர்களிள் கிழமையை உணர்த்தப் பலவின்பால் விகுதியாகிய அகரம் உருபாக வரும். ''என கைகள்''

''பொருள் உயர்திணையாயின் இவ்வுருபுகள் வருதல் இல்லை. தொகையாகவே வழங்கும் (என் மகன்) அல்லது சொல்லுருபு வரும் (என்னுடைய மகன்)

என்றெழுதியுள்ளார் வேறுசில இலக்கண நூலியற்றப் புக்க இந்நாட்புலவர்களும் உரையாசிரியன்மாரைப் பின்பற்றியே உரைத்துள்ளார்கள்.

"தொல்காப்பிய ஆராய்ச்சி"யின் ஆசிரியர் உரையாசிரியன்மார் கருத்தொடு அமைந்தார், "மொழி நூலின் ஆசிரியரோ அவ்வளவின் அமையாது, அம்முடிவு எறுழுறுவான் சிற்சில மொழிந்துள்ளார்.

"அது" எள்னும் உருபு ஒன்றன்பால் குறிப்பு வினைமுற்றுக்களிலும் குறிப்பு வினையாலணையும் பெயர்களிலும் ஈருதல் காணின் அதன் உண்மை ஒருவாறு விளங்கும்" எனல் காண்க குறிப்பு வினைமுற்றுக்களிலும் குறிப்பு வினையாலணையும் பெயர்களிலும் வரும் ஈறு 'அது' என்னும் உருபு அன்று அது 'துவ் விகுதியே' யாம் என்னை ?

"இவ்வீடு எனது, அத்தோட்டம் அவனது என வருவனவற்றில், எனது, அவனது என்பன துவ்விகுதியும் அகரச்சாரியையும் பெற்று நின்ற குறிப்பு வினைமுற்றுக்கள். எனது போயிற்று, அவனது வாங்கினேன் என வருவனவற்றில், எனது அவனது என்பன மேற்கூறியபடி வந்த குறிப்பு வினையாலணையும் பெயர்கள். இவற்றை இவ்வாறு கொள்ளாது ஆறனுருபெனக் கொள்ளற்க"

எனத் திருத்தணிகை விசாகப் பெருமாளையர் தெருட்டலைத் தேர்க. சாரியையாகவந்த அகரத்தையுங் கூட்டி 'அது' என்று கொண்டு ஆறனுருபென மொழி நூலாசிரியர் மொழிந்ததேய்ப்ப. மாணுக்கர் மயங்கற்க வென்பார் "ஆறனுருபெனக் கொள்ளற்க" என்றதூஉங் கருதுக. அன்றியும்

"எனது கைகள்," "எனது மகன்" என வருதல் இலக்கண வழக்கன்று. பேச்சு வழக்கும் அன்று"

என்றது மிகைபடக் கூறலேயாம். என்னை? யாங்காட்டிய அத்துணைச்சான்றுகளையும் இவ்வாசிரியர் கண்டிருத்தல் வேண்டும். காட்டாதொழிந்தவற்றையுங் கண்டிருத்தல் வேண்டும். ஆகலின் இலக்கண வழக்கென்றல் இயையாததே. இயையுமேல் யாங்காட்டிய சான்றுகள் எவ்வழக்கென்னுங் கடாஎழுமால்.

செய்யுளில் அமைவன வழுவமைதி எனக்கொள்ளல் எளிதேயென்றுரைக்கப்புகின் அவ்வுரை ஏற்புடைமையாகாது என்னை? செய்யுளில் அமைவன வழுவமைதியேல் மற்றுயாண்டமைவன வழுவெனப்படுமோ என்றுரோசங்கை நிகழுமாகலான. அன்றியும் இலக்கண விதிகளெல்லாஞ் செய்யுளை நோக்கியனவேயன்றி

வேறெவ்வழக்கையுமன்று. உரையாசிரியன் மாரும் செய்யுளையே நோக்கி உரை வகுத்திருத்தலுங்கருதுக உரை நடை அஞ்ஞான்று பல்கிற்றில்லாமையின் அதைக் காட்டல் அமைவுடைத்தாகாதே. அன்றியும், வழுவமைதியெனின் அதனை உரையாசிரியன்மாரும் மொழி நூலாசிரியரும் வழூத்தாமையென்கொலோ? வழுவமைதியெனின் எக்காரணம் பற்றி வழுவமைதியாயிற்று? உவப்பினுலா, விரைவினுலா, அல்லது வேறு ஒன்றினுலா? 'எனது மகன்' இலக்கண வழக்கன்ருயின். இலக்கியத்துட் பயிலுதலால் இலக்கிய வழக்கென்னல் சீர்மைத்தோ? இவர் கூறும் இலக்கண வழக்கையீன்றதே இலக்கியமாகலின் இரண்டையும் வேறு பிரித்தெண்ணல் இசையாதால் சிவஞ்சத்தி தன்னையீன்று அம்மையப்பராய்க் காட்சியருளலே போல இலக்கியம் இலக்கணத்தை ஈன்று இயற்றமிழாய் ஒன்றியே நிற்கும். எனவே 'எனது மகன்'' இலக்கண வழக்கன்று என்ற கூற்று இரித்த தென்க.

உரையாசிரியர் தமிழிலும் சங்கத் தமிழிலும் இவ்வரம்பு தெளிவாக உள்ளதென்பராலோ வெனிற் சோறும். உரையாசியர் தமிழ் இவ்வரம்பிகந்தொழுகலை மேலே காட்டினும். மேலுந் தொடர்பு பின் சானறுகளின் எண்ணிக்கை மிகுதலே செய்யும். சங்கத் தமிழெனின், நாம் கடைச் சங்க நூல்கள் முழுதும் பெற்ருேமல்லோம். பெற்றவை பெரும்பாலும் தனி நிலைச் செய்யுட்களே. பாக்களில் வேற்றுமை உருபு விரிந்து நிற்றலைக் காண்டலருமையினும் அருமை. என்னை? சொற் சுருங்கப்பாடுதலே அழகு எனப்படுமாகலின் பாக்கள் முற்காலத்தவாயினும், பிற்காலத்தவாயினும் அஃறிணைக் கிழமையாயினும். உயர்திணைக் கிழமையாயினும் வேற்றுமை உருபு தொக்குவருதலே பெரும்பான்மை. ஆயிரக்கணக்கான பாடல்களியற்றும் ஆசிரியர் ஒருவர் யாண்டோ ஒரு பாடலில் உருபு விரிந்து நிற்கச் செய்யுள் செய்வர். எனவே சங்கத் தமிழிற் காணப்படாமை வியப்பன்று. எனினும், மேலும் அந்நூல்களை ஆய்ந்து காண்டல் வேண்டுவதேயாமென்க ஆகலின் உரையாசிரியர் தமிழிலுஞ் சங்கத் தமிழிலும் இவ்வரம்புள தென்றல் நறிய அமைதியாகா தென மறுக்க.

இனி "பேச்சு வ்ழக்கும் அன்று'' எனலும் இசையாததே. கல்வியறிவு குறைந்த மக்கள் விடுக்கும் திருமண அழைப்பிலும் "எனது குமாரன்,'' "என்து குமாரத்தி'' என வருதல் காண்க

ஆகலின் 'மொழி நூல்' ஆசிரியர் கூற்று இலக்கிய வழக்கையும், பேச்சு வழக்கையும் முரணி நிற்பதேயாயிற்றென்பது போந்தது.

௬. முடிப்புரை

இதுகாறுங் கூறியவற்றால் தொல்காப்பியப் பெருமானின் திருவுள்ளந்தேராதும், இலக்கிய வழக்கை எண்ணிப் பாராதுஞ் சேனாவரையர் செய்த உரை ஏற்புடைத்தாகாமை பெறும்.

ஓராடு சென்ற வழியே மற்ற ஆடுகளுஞ் செல்வதே கடுப்பப் பிற்றோன்றிய உரையாசிரியன்மாரும் தமக்கு முன்னிருந்த ஆசிரியன்மாரைப் பின்பற்றியொழுகலை மேற்கொண்டு உரை வரைந்தனரே யல்லாமல் இலக்கிய ஆய்வுத் துணைகொண்டெழுதினரல்லர் என்பதும் பெறும்.

இலக்கணத்தை உரைநடைப்படுத்தப்புக்க இந்நாட் புலவரும் உரையாசிரியன்மாரைப் பின்பற்றினரேயல்லாது இலக்கியமுணர்ந்தெழுதினரல்லர் என்பதும் பெறும். ஒரு மொழி பற்றிய விளக்கந் தரப்புகுவார் முன்னர் அந்நூற்கணுள்ள இலக்கியங்களை ஆய்ந்து, பின்னர் இலக்கணத்தை ஆய்ந்து ஒப்பிட்டு எழுதலே நலம் பயப்பதாகும். இதனானன்றே இலக்கியங் கற்றபின் இலக்கணங் கற்றல் வேண்டுமென இலக்கண நூலார் விதி வகுத்தனர்.

திருத்தணிகை விசாகப் பெருமாளையருரையும் சடகோப ராமாநுசாசாரியர், சே. கிருட்டினமாசாரியர் என்பவர்களது உரையும் இலக்கிய வழக்கோடு பெரிதும் பொருந்தி நிற்பன. அறிஞர்களால் சிரமிசையேந்தி யேத்தப்படுபவை. சீர்மை கொண்டு விளங்குபவை. ஆகலின் அவ்வறிஞன்மாரைச் சிரந்தாழ்த்திப் பணிவாமாக.

பொழிலன்பர்கள் சுவைக்க.

சந்து - பொந்து - கந்து

நம் மொழியில் சொற்களமைந்த வகைகளில் ஒரு தனி வகை யுண்டு. மேற்காட்டிய சொற்களில் முதல் எழுத்துக்கள் வேறு பட்டும் ஏனைய எழுத்துக்கள் ஒன்று பட்டுமிருக்கின்றன. இவைகளில் முதல் எழுத்துக்கள் வேறுபட்டதுபோல இச்சொற்களில் பொருள்கள் வேறுபட்டன வென்பது வெளிப்படை. மற்ற எழுத்துக்கள் ஒன்றுபட்டது போல் இச்சொற்களாற் குறிக்கப்படும் பொருள்களில் ஊடுருவிச் செல்லும் இடைவெளி உண்டெனபதும் தெரிகிறது.

சந்து என்பது ஒரு வீட்டிற்கும் அடுத்த வீட்டிற்கும் இடையில் வெளியுண்டானல் அது சந்தாகும். இச்சந்து தெருவிலிருந்து அவ்வீட்டின் கொல்லைக்கோ அல்லது தெருவிற்கோ போக வழிகொடுக்க வேண்டும். பொந்து என்னும் இடத்தில் உட்புக இடமுண்டு. ஆனல் கொல்லைக்கோ அல்லது தெருவிற்கோ போவதற்கு வழியில்லை. அதாவது பொந்தின் ஒரு பக்கம் பொத்தியிருக்கும். எனவே அது பொந்தாயிற்று. கந்து என்னும் சொல்லிற்குத் துளை என்னும் பொருளுண்டு. எனவே ஓர் ஆடையில் பல துளைகளிருந்தால் அந்த ஆடை கந்தையாகும். கந்துகள் உள்ள ஆடையாகையால் இத்தகைய ஆடையைக் கசக்க வேண்டும், துவைக்கக் கூடாது. துவைத்தால் கந்துகள் பெரியவையாகிக் கிழிந்து விடும். ஆகையாலதான் நம் முன்னோர் "கந்தையானலும் கசக்கிக் கட்டு" என்றனர்.

"கந்து' என்ற சொல்லிலிருந்து "கந்தை" என்னுஞ் சொல் வந்தது போலச் 'சந்து' என்னுஞ் சொல்லிலிருந்து 'சந்தை' என்னுஞ் சொல் வந்தது. சிற்றூர்களில் தோப்புகளில் கூலவாணிகரும் மற்ருேரும் பொருள்களை வரிசை வரிசையாக வைத்திருப்பார்கள். ஒரு வரிசையிலிருந்து அடுத்த வரிசைகளுக்குப் போக இடை இடையே சந்துகள் பல உண்டு. இவ்வாறு பல சந்துகள் உடைய இடம் சந்தையெனப் பெயர் பெற்றது போலும். இன்னும் தெருவும் சந்தும் கூடுமிடம் 'சந்தி' எனப் பெயர் பெறுகின்றது. எனவே 'முச்சந்தி' என்ற சொல் புணர்ச்சி அல்லது சேர்க்கை என்னும் பொருள் பெற்றது. சந்தி என்னுஞ் சொல் தனித் தமிழ்ச் சொல்லே.

கோ தியாகராசன், சி. எம். வி. சி.

தமிழ்ப் பொழில், து 29—1953.